

காற்றின் தாலாட்டு புல்லாங்குழல். அது மூங்கில்கள் தந்த இசைக்கொடை. 'புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே... எங்கள் புருஷோத்தமன் புகழ் பாடுங்களே' என்று கவிஞர்களின் பேனாக்கள் புல்லாங்குழலுக்கு பக்திப் போர்வை போர்த்தி அழகு பார்த்த வரலாறும் உண்டு.

இசைக்கு மயங்காத இதயமில்லை. பறவைகள், மிருகங்கள் கூட இதற்கு விதிவிலக்கில்லை. காற்றில் பிறக்கும் இந்த கானம், இன்றைக்கும் இசை ரசிகர்களின் தேவகானமாய் இருக்கிறது. இதை இசைக்கும் ஒவ்வொரு வினாடியிலும் என்னை நானே மறக்கிறேன் என்கிறார், விஜய்.

இவர் புல்லாங்குழல் இசைக்கலைஞர். உலக நாடுகள் பலவற்றிலும் இவரது புல்லாங்குழலுக்கு இசை ரசிகர்கள் அதிகம். சென்னை வானொலியிலும் தேர்வு பெற்ற கலைஞர்.

மூச்சுக்காற்றை குழல் வழியே கானமாக்கும் விஜய்யிடம், "எப்படி வந்தீர்கள், இந்த இசைக்குள்?" கேட்டோம்.

"பாரம்பரிய இசைக்குடும்பம் எங்களுடையது. 6 வயதில் தாத்தா எல்.சுந்தரத்தின் மடியில் அமர்ந்தபடி கற்றுக்கொண்ட இசை இது. என் 10 வயது வரை தாத்தா தான் என் புல்லாங்குழல் குருவாக இருந்தார். அப்பா கே.பி.ஜோதியும் புல்லாங்குழல் இசைக்கலைஞர் தான். மாமாக்கள் ரகு, ரவி இருவரில் ரகு மாமா இசைக்கல்லூரியில் லெக்சரராக இருந்தவர். ரவி மாமா கர்நாடக சங்கீதத்தில் இப்போதும் மாணவர்களை உருவாக்கி வருகிறார். இப்படி இசைக்குடும்ப பின்னணி அமைந்த காரணத்தால் இசை எனக்குள்ளும் பதிந்து போனது.

# உலக நாடுகள் வியக்கும் புல்'லாங்'குழல்!

திருவல்லிக்கேணி இந்து ஹையர்செகண்டரி ஸ்கூலில் பத்தாவது படித்த நேரத்தில் தமிழாசிரியர் சுப்பிரமணியம் எனக்கு தமிழ் பாடல்களில் ஆர்வம் ஏற்படுத்தினார். அதுவே பின்னாளில் பள்ளி மாணவர்களுக்கான தமிழ் பாடல்கள் அடங்கிய இசை ஆல்பம் போடும் அளவுக்கு என்னை வளர்த்து விட்டது.

இனி தனிக்கச்சேரி செய்யலாம் என்று நம்பிக்கை வந்த நேரத்தில் மேடைக் கச்சேரிகளை ஒப்புக்கொண்டேன். கர்நாடக இசைக்கச்சேரிகளை வாசித்து வந்த நேரத்தில் சினிமாவுக்கு வாசிக்கும் வாய்ப்பும் தேடி வந்தது. மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன், இசைஞானி இளையராஜா ஆகியோர் இசையமைத்த சில படங்களில் புல்லாங்குழல் இடம்பெறும் பகுதிகளுக்கு நான் புல்லாங்குழல் வாசித்ததையும் மறக்க முடியாது.

இதில் எனக்கு இன்னொரு ஆனந்த அதிர்ச்சியும் கிடைத்தது. ஏழெட்டு வருஷம் முன்பு பொதிகை டிவியில் 'ஜரிகை' என்று ஒரு தொடருக்கு இசையமைக்கும் வாய்ப்பு வந்தது. 60 வயது தாண்டியவர்களை சந்தோஷமாய் வைத்துக் கொள்வது எப்படி என்பது தான் கதைப்பின்னணி. இந்த தொடரின் டைட்டில் பாடலை மெல்லிசை மன்னர் பாடினால் பொருத்தமாக இருக்கும் என்று தோன்ற, தயக்கத்தை மறைத்தபடி அவரை சந்தித்து பேசினேன். என் விருப்பம் கேட்டதும், 'அதுக்கென்ன, தாராளமாய் பாடுகிறேன்' என்ற சொன்னவர், அற்புதமாக பாடியும் கொடுத்தார். அதற்குப் பிறகு என்னை எங்கே பார்த்தாலும், 'என்ன, அப்புறம் கூப்பிடவே இல்லையே?' என்று கேட்டார்.

**பவுர்ணமி**



நிலவுப்பெண்ணே
மணமகன் வருகிறானா,
உன்னை பெண் பார்க்க..?
மாதத்தில் ஒருநாள்
ஜொலிக்கிறாயே!

—ஈ.கார்த்திகேயன்,
அரமத்தாபாளையம்